

**பட்டுக்கோட்டையின் தந்தை செங்கமலாபுரி**
**திரு.ரெ.அ ருணாச்சலம் பிள்ளை எழுதியது**

# முசுகுந்த நாடு
# அலங்கார
# வழிநடைக்கும்மி

## நமது கிராமம் வெண்டாக்கோட்டை
## பற்றி எழுதி உள்ளார்.

## வெளியிட்ட வருடம் : 1931-ம் ஆண்டு
## வெளியிட்ட இடம் : சிங்கப்பூர்

காண வேண்டிய சமூக இணையதள முகவரி : www.vendakkottai.com

நாடி அம்மன் நம்மை கோபிப்பாளே – பெண்ணே
நாமும் தேடிக்கொண்டு மெல்ல சென்றிடுவோம்
சாலை வழியாக போனோமானால் –பெண்ணே
சந்தடி படாது ஊர்களெல்லாம்

சம்பங்கி வாசம் குணமுள்ள – பெண்ணே
சற்றே திரும்படி தெற்கு முகம்,
தெற்கு முகமாக ஓடி நடந்து வா
தேன் மொழியே கிள்ளை மொழி மானே'

நாட்டு சாலை என்னும் ஊருக்குள்ளே– பெண்ணே
வேட்டுமையாக விளைந்திருக்கும்
கனகசவுந்தரி வாசமடி – பெண்ணே
காராள குலத்து பாலருக்கு

பூமி பாலகரும் இவர்தான்டி – பெண்ணே
பூலோக குபேர நகரமடி.
சகல தானியம் தான்விளையும்– பெண்ணே
பலவிதமான பழங்களுண்டு.

கண்ட விடமெல்லாம் திரியாமல் – பெண்ணே
வெண்டாக் கோட்டைக்குப் போயிடுவோம்
அண்டாதி தேவர்கள் அமைத்துவைத்த – இந்த
வெண்டாக் கோட்டையும் தெரிகுதடி,

திருவாடுதுரை ஆதீனத்தார் தோட்டம்
முன்னே தெரிகுதுபார் மயிலே
பஞ்சரெத்தின பட்சி பறக்குதடி –பெண்ணே
பாலகோட்டை கோவில் ஒதுங்குதடி.

பாரத பூமி உழுதுயிருக்கு – பெண்ணே
பாதசரம் மிஞ்சி பதனமடி
முன்னே தெரிகுது முன்னை முசட்டையும்
முந்திரி முதலான செடிகள் எல்லாம்

நாம் போம் வழியும் இது தான்டி – பெண்ணே
நாலு திக்கிலும் பனைமரங்கள்
மாமரம் சோலையதிகம்மடி – பெண்ணே
மரம் பலாவும் கொஞ்சுதடி

அழும்பாக நீயும் நினைக்காதடி – பெண்ணே
ஒழுங்கையிலே வந்து யேறடியே
ஒழுங்கைக்கும் மேல்புறம் கர்ப்பக சோலையும்
ஒதுக்கி யிருக்குது பாரடியே.

ஒரு மாதமாக ஒன்பது நாளாக
உம்மோடு கும்மி பாடி வந்தேன்
காலும் அசந்திட்டு வாயும் நொந்திட்டு
கண்ணான எந்தன் தாசர்களே.

பேசாமலே இந்த ஊருக்குள் போகுறீர் –தங்கள்
நேசர்களுண்டோ சொல் அய்யாவே
நேசமென்பது ரத்த பாசமடி –எந்தன்
சுற்றத்தார் இருப்பது இவ்வூருந்தான்டி,

சுற்றத்தா ரென்றால் யாரென்று கேட்பாயே
சுந்தரியே சற்று உற்றுப்பாரு
ஊருக் கதிகாரி வீர பெருமாள்
வேளாள ரென்பவர் இருந்தாரடி.

சூராதி சூரனாய் இருந்தவரும் – பெண்ணே
சூழ்ந்த நாடெல்லாம் மெச்சும்படி
ஆறு சாஸ்த்திரம் கற்றவராம் – பெண்ணே
ஆதினத்தாருக்கு உற்றவராம்

வேத வேதாந்தம் படித்தவராம் –பெண்ணே
விதியுபதேசங்கள் கற்றவராம்
காணியில் மெத்த மிகுந்தவரும் –பெண்ணே
காமரூப சுந்திரராம்.

சுந்தர ரூபம் மென்றீரே சுவாமி – அவர்
அந்தரங்க பக்தி யுள்ளவரோ
கோவில் குளங்களும் கட்டினாரோ –சுவாமி
குமரனையும் கொண்டாடினாரோ.

குமரன் பேரை சொல்ல வந்தாய் –மயிலே
அமராபதியின் மருகனடி
அமராபதியின் திருமகளை அவர்
அன்னாளில் மாலை இட்டுக்கொண்டு

அண்டர் முனிவராலே அமைத்திட்ட
வெண்டாக்கோட்டையில் வந்துசேர்ந்தார்
ஆரூரான்பாதமே சிரசில் வைத்திட்ட
வீர பெருமாள் வேளாளரும்,

வேலனைத் தந்து நிலை நிறுத்தின
வீர பெருமாள் வேளாளர்தான்
பால் காவடி கட்டி பழனிக்குச் சென்றாரே.
பால சுப்பிரமணியன் பாதம் காண.

வேலனருளே சுமக்க வேணுமென்று.
வேண்டிய நாளெல்லாம் விரதம்பூண்டு பக்தன்
நித்திரை போகின்ற வேளையிலே
சத்தி மகன் வடிவேலவனும்

சுற்றிலும் காடு சூழ்ந்திருக்கும் –பக்தா
சத்திவேல் அவ்விடம் தங்கிருக்கும்
வேங்கை மரமும் முளைத்திருக்கும் – பக்தா
விக்னேஸ் வரரும் உதித்திருப்பார்.

அந்த இடத்திலே தங்கிருப்பேன் – பக்தா
அவ்விடம் வந்து நீ கண்டுகொள்ளு
தொழுதவர் துயரம் நீக்குகின்ற –நானும்
குழந்தை வேலு என்பெயரு.

என்று மறைந்தார் என் பெருமாள் மருமகன்
ஏங்கி எழுந்தாரே வீர பெருமாள்
பஞ்சாட்சரம் எடுத்து நெற்றியிலிட்டு –பெண்ணே
பறந்து வந்தாரே தன்னகரம்.

ஊரினில் வந்துமே ஆட்களைச் சேர்த்து
ஒதுக்கி வெட்டினார் காடுகளைக்
காடுகளை வெட்டி வேலனைக் கண்டுமே
கட்டினார் இந்தக் கோவிலையும்

வேலன் அருளைப் பெற்றவராம் – பெண்ணே
வீர பெருமாள் வேளாளரும்
எந்தன் வயதுக்கு தெரிந்த வரையில்
எடுத்து சொன்னேண்டி அவர் புகழை.

வேலன் புகழை நான் சொல்லப்போறேன்–பெண்ணே
சேலையை இறுக்கி கட்டிக்கடி.
காலாழி பீலாழி கழலாமல் – பெண்ணே
கண்ட சரப்பளி ஒதுங்காமல்

கோல வர்ணப்பட்டு சேலை கட்டி – பெண்ணே
கூந்தலுக்கு மலர் மாலைச்சூட்டி
காப்புக் கொலுசுகள் கையிலிட்டு – பெண்ணே
காசு மாலையை மேலேயிட்டு

கண்ணுக்கு நேராக மையு மிட்டு –பெண்ணே
கஸ்தூரி திலகம் பொட்டுமிட்டு
சேந்திணையாகவே பாடிக்கொண்டு
பாலனை காணுவோம் வந்திடுவாய்.

காலையும் பிண்ணி நடக்காதே –பெண்ணே
வேலன் கோவிலுக்கு முன்னாலே
கூச்சத்தை மனதிலே எண்ணாதே – எந்தன்
குல மக்களடி எல்லோரும்.

சோழ வளநாட்டு செந்தமிழை –பெண்ணே
வேளாளர் குலத்தோர் சொன்னேனடி
ஆரூரான் பாலனே வேலவனே –இந்த
அருணாசலத்தையும் காக்கவேணும்.

தாருகா சூரனை தான் வதைத்து–பெண்ணே
தேவர் சிறையை மீட்டுவைத்தார்
தேவர் சிறையை விடுவித்த வேலன்
தெய்வானை மணாளன் இவர் தான்டி,

முப்பத்து முக்கோடி தேவர்களுங்கூடி
முகூர்த்தம் முடித்தாரிவர்களுக்கு
கலியாண சடங்குகள் தான் முடித்து–இவரை
கலியுக வரதனென்றே நேமித்து.

தேவருசன் மகள் தெய்வயானை மணவாளன்
சிவன்பாலன் சுப்பிரமணியனுக்கு
வேணும் வரிசை ஆபரணங்களும்
ராணுவ படையும் தான்கொடுத்து

கலியுகநரரைக் காக்க வேணுமென்று–பெண்ணே
கதிர்காமம் தன்னிலே அமர்ந்திருந்தார்.
பாரத மக்கள் கோரம் தீர்க்கவென்று
பாண்டு பூமியெல்லாம் பரவி நின்றார்.

ஆண்டி வேஷம் பூண்டு கானகம் தன்னிலே
வேடனாகவே வந்து நின்றார்
ஊரைக் கலைத்திட்ட நாரத மாமுனி
ஒரு மானாகவே ஓடிடவே

கேடயம் வாளும் கையிலேந்தியே
வேடனும் கூடத் தேடிடவே
ஆலோல மென்று பட்சிகள் விரட்டியே
அன்னை வள்ளியும் நின்றிடதே

ஆணையைக் கானாத பரகு சுந்தான்–பெண்ணே
பானையில் கைவிட்டு பார்த்ததுபோல்
மானையும் கண்டாயோ வள்ளியென்றுமே
மருவி நின்றார் வேலன் கானகத்தில்

அறை வீட்டில் புலிவேட்டை ஆடினாப்போல்
அன்னை வள்ளியிடம் மான்தேட
மானையும் இவ்விடம் நான் காணேன் –காட்டு
மலையில் வாழும் வேடுவரே

கானகத்தில் வாழும் பெண்ணரசே–மானை
காணோமென்று சொல்ல தகுதியோடி
ஆங்காரமுள்ள வேடுவனைப்பார்த்து–ஏன்
அன்னை வள்ளியுமே பயந்து.

அண்ணர்களே அண்ணா வென்றழைக்க –வேலர்
அப்போது வேங்கை மரமானார்
வேங்கை மரமும் இதுதான்டி –வடி
வேலவரிருப்பிடம் இதுதான்டி

வளையல் செட்டியு மிவர்தான்டி–பெண்ணே
வள்ளியை மணந்தவ ரிலர்தான்டி
சிங்காரமாகவே கூடுங்கடி –சிவ
சுப்பிரமணியன் கோவிலை பாருங்கடி.

முன்னாலே திருக்குளம் பாரடியே–அதில்
முழுகி ஸ்னானங்கள் செய்திடுவோம்
வேலன் கோவிலுக்கு முன்னிலையில் –பெண்ணே
வில்வ மரமொன்று தானிருக்கும்

பத்திரி கையில் பரித்துக்கொள்ளு –பெண்ணே
பால கணேசனை பூசைசெய்வோம்
வேங்கை மரத்தையும் தான் பார்த்து–பெண்ணே
வினாயகர் பூசையும் செய்திடுவோம்

நத்திகேஸ்வரனை நமஸ்கரித்து –பெண்ணே
நாடி கும்மி யடித்திடுவோம்
மஞ்சள் குங்குமம் பூவுடனே–பெண்ணே
மாவிளக்கை நீயும் பிசைந்துகொள்ளு

தேனும் தினைமாவும் பிசைந்துகொண்டு –பெண்ணே
தேங்காய்ப் பழமும் எடுத்துக்கொள்ளு
கற்பூர தீபத்தைக் கையிலேந்தி –கந்தன்
கோவிலுக்குள் நாம் போய்விடுவோம்.

கோவிலுக்குப்போய் சாமி வேலவனை
கும்பிட்டு அர்ச்சனை செய்திடுவோம்
பஞ்சாட்சரம் வாங்கி நெற்றியிலிட்டு – பெண்ணே
பால சுப்பிரமணியன் கோவில் சுற்றி

இடும்பன் இருக்கும் இடந்தேடி – பெண்ணே
இருபேரும் போய் நமஸ்கரிப்போம்
இடும்பன் கோவிலைப் பாரடியே – உதிர
வேங்கை மரத்தையும் பாரடியே.

வைகாசி யாகம் கூட்டமடி – பெண்ணே
வடிவேலன் சன்னதி கோட்டமடி
சுற்றிலும் வேளாளர் வீடதிகம் –பெண்ணே
தோகையரே சற்று சுற்றிடுவோம்.

தெற்கு முகமாக திரும்பிடுவாய் – பெண்ணே
தேவி மாரிகோவில் பார்க்கவேணும்
மாரியம்மன் கோவில் பாரடியே – பெண்ணே
மல்லிகைப் பூப்பந்தல் நேரடியே.

பூப்பந்தல் போட்டுமே பொங்குதடி–பெண்ணே
பொன்னான மாரியம்மன் பாதமதில்
பொன்னான மாரியம்மன் பாதமதில் –பெண்ணே
போய் நமஸ்க்காரம் பண்ணியபின்

இன்னமும் தெற்கே திரும்படியே – பெண்ணே
இங்கே விசேஷம் அதிகமடி
காளியம்மன் கோவில் கண்டுகொள்ளு –பெண்ணே
கண்ணுக்கு நேராக திரும்படியே.

ஆவிடையா நம்பதிருக்குளம் பாரடியே
அல்லியும் தாமரை படர்ந்திருக்கு
ஆறு அரசு இலுப்பையுடன் – பெண்ணே
அழகான நிழலும் சூழ்ந்திருக்கு

மச்சங்கள் மேய்கிற சிங்காரத்தை –பெண்ணே
மங்கையே சுற்றி நீ பாரடியே
அம்புவியோர் மெச்சும் செவ்வலர் கண்ணாளே
தம்புராய வேளாளர் வீடு இது.

கன்னல் மொழிமானே இங்கே தங்கடி –நாம்
கண்டுகளித்து போயிடுவோம்
பாவித்து சொல்கிறேன் கேளடியே– பெண்ணே
கோவிந்த வேளாளர் வீடுஇது

கோவில் காரியங்கள் நடத்துவராம்–பெண்ணே
கோலாகலமான வேலவனுக்கு.
பட்டாமணியத்தின் சிறந்தவராம் –பெண்ணே
பாலசுப்பிரமணியர்க் குகந்தவராம்

வேல்போன்ற கண்ணாலே தெற்கே திரும்படி
வினாயகர் கோவில் தெரிகுதுபார்
அந்தரங்க பக்தியுள்ளவளே –பெண்ணே
அந்தாயிருக்குது கூந்தப்பனை

அரிஹர புத்திரன் அவதரித்த –இந்த
அய்யனார் கோவிலிதுதான்டி.
பால் கடல் போலவே தெரிகுதடி–பெண்ணே
பண்பான ஏரியைக் கண்டவுடன்.

வந்த வழிபார்த்து திரும்பிவிடு –பெண்ணே
வடக்கு முகம்மாக சென்றிடுவோம்
ஆசானிருந்ததோர் காசாங்காடு –பெண்ணே
அன்பாய் இருவரும் சென்றிடுவோம்.

ஒழுங்கை வழியாக சென்றிடுவோம் –பெண்ணே
அழும்பு செய்யாமல் நடந்துவாடி,
பாரத மக்கள் படுந்துயரத்தை
பைங்கிளியே சற்று உற்றுப்பாரு.

வள்ளி மாவள்ளி வைத்திருக்கு
வளமான கேழ்வரகிருக்கு
வெள்ளரி பரங்கி காய்களெல்லாம்–பெண்ணே
வேண்டியது இங்கு விளைத்திருக்கு.

செவக்கொல்லை வழியாய் வந்திடுவாய்–பெண்ணே
சீரான எந்தன் ஞானக்கண்ணே
ஆற்றினில் தண்ணீர் வருகுது–பெண்ணே
பாலத்தின் மேலேறி சென்றிடுவோம்.

காற்று வேகமாக வருகுது சுழல்கொண்டு
கண்கொண்டு பார்க்க முடியாது
பாலத்தின் வழியாக வந்திடுவாய் –பெண்ணே
ஆலமரத்தையும் பாரடியே.

ஆலவிருஷத்தின் கீழேயிருக்குது
கோலாகலமான முனியன்கோவில்
சாலையை விட்டு நீ கீழே யிறங்கடி
மேலைக் காட்டுக்குள்ளே போயிடுவோம்.

ஆசானிருந்த காசாங்காட்டுக்குள்ளே
அன்பாய் வந்திட்டோம் ஞானப்பெண்ணே
மூன்று பத்து ரெண்டு நாடுதனில்–பெண்ணே
காசாங் காடென்பது நடுநாடு,